# நீட்ஷேயின் "அதி மானுடச்" சிந்தனையில் ஆரம்பகால உபநிடதச் செல்வாக்கு: ஓர் மெய்யியல் நோக்கு

**புலேந்திரன் நேசன் & பீ.எம். ஜமாஹிர்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Correspondence: pnesan92@gmail.com

**கட்டுரைச் சுருக்கம்**

*இக் கட்டுரை நீட்ஷேயின் மெய்யியலின் சாராம்சமான அதிமானுட சிந்தனையினை ஆராய்வதாகவுள்ளது. அதிலும் குறிப்பாக, மேலைத்தேய கருத்துக்களையும் இந்திய சிந்தனை மரபில் உபநிடத சிந்தனைகளின் தனிச் சிறப்புக்களையும் விளங்கி நீட்ஷே எவ்வாறு தன் அதிமானுடனை கட்டமைக்கின்றார் என்பதனை எடுத்துரைக்கின்றன. உபநிடதச் சிந்தனைகளின் தனிச் சிறப்பு எவ்வாறு ஜேர்மனிய மெய்யியலாளரான நீட்ஷேயினால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது ஆய்வுப் பிரச்சினையாகும். நீட்ஷேயின் கிறிஸ்தவ சமயம் சார் எதிர்ப்பும் அக்காலத்து ஐரோப்பிய சூழ்நிலையுமே ஆரம்பகால உபநிடத சிந்தனைகளில் ஆர்வத்தினைச் செலுத்த காரணமாயிற்று என்பது ஆய்வின் கருதுகோளாகக் காணப்படுகின்றது. இவ் ஆய்விற்கான தரவுகள் நீட்ஷேயின் மூல எழுத்துக்களையும், அவற்றின் மொழிபெயர்ப்புக்களையும், அவற்றினைத் தழுவி எழுதப்பட்ட நூல்களையும் அத்துடன், ஆரம்பகால உபநிடதம் சார்ந்து எழுதப்பட்ட மூல நூல்களையும், அது சார்ந்த முன்னைய ஆய்வுகளையும் பெரிதும் பயன்படுத்துகின்றது. ஆய்வானது ஒப்பாய்வு முறை, விளக்கமுறை ஆய்வு மற்றும் விமர்சன முறை போன்ற ஆய்வு அணுகுமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. நீட்ஷேயின் அதிமானுடத் தளமானது மேலைத்தேய சிந்தனைகளுடன் ஆரம்பகால உபநிடதங்களின் கருத்துக்களையும் உள்வாங்கி உருவாக்கப்படுகின்றது. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் மேலைத்தேயப் பின்னணியினை மட்டுமே பெரிதும் பின்பற்றியமையினால் மேலாதிக்கப்போக்கு கொண்டதாகவும், அதி வல்லமையின் மறுவடிவமாகவே அதிமானுடக் கருத்தாக்கம் கட்டமைக்கப்பட்டிருந்தது. ஆனால், இவ் ஆய்வில் அதிமானுடக் கருத்தாக்கம் மேலாதிக்கப் போக்கிற்கு வழிவகுப்பதில்லை. மாறாக மனவலிமையும், ஆற்றலும் மிகுந்த நிலையில் உருவான ஒன்றாகவே கட்டமைக்கப்படுகின்றது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.*

**பிரதான சொற்கள்:** *நீட்ஷே, முற்கால உபநிடதம், கிறிஸ்தவம், அதிமானுடன்*

## 1. அறிமுகம்

மேலைத்தேயத்தில், குறிப்பாக ஜேர்மனியில் *19* ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் சமயம் சார் நம்பிக்கைகள் மேலோங்கி, ஆட்சிக் குழப்பங்கள் நிறைந்து, சமுதாயம் நெறிதவறிய நிலையில் காணப்பட்டது. அத்துடன், இன்மைவாதச் சிந்தனை உலகினை மறுதலித்து மனிதரின் இருப்பினையும் கேள்விக்குட்படுத்தியது. இப் பின்னணியில் உருவானதே நீட்ஷேயின் மனித இருப்புவாத மெய்யியல் சிந்தனையாகும். உண்மையில், ஆரம்பத்தில் வாழ்ந்த ஒரே ஒரு கிறிஸ்தவரான யேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டுவிட்டார். இவ்வாறு கடவுளின் இறப்பு நிகழ்ந்த பின்பும் மக்கள் அதிலிருந்து விடுபடாது, அது சார் மாயப் புலக்காட்சிகளுக்கும் (Hallucination), போலி நம்பிக்கைகளுக்கும் ஆட்பட்டிருந்தனர். இதுவரை காலமும் காணப்பட்ட இந்த நிலையினாலே மனித இருப்பும், வாழ்வும் கேள்விக்குள்ளாயிருக்கின்றது. ஆக, மனிதன் பலம் பெற்று கடவுளின் இறப்பினை ஈடுசெய்தல் வேண்டும் என்ற அடிப்படையில் உயர்ந்த, மேம்பட்ட மனிதனை தனது சிந்தனைகளில் வலியுறுத்தி "அதிமானுட நிலையை (Superman stage)" அடைவது தொடர்பான தனது கருத்துக்களை எடுத்துக்காட்ட முயன்றார்.

இந்திய மெய்யியல் மரபில் பிரதான சிந்தனையாக உபநிடதங்கள் காணப்படுகின்றன. தொன்மைக் காலத்தில் நிறைந்து காணப்பட்ட சடங்காசாரங்கள், கிரியை மரபுகள் என்பனவற்றை மறுதலித்து உறுதியான உண்மையை ஆழ்ந்த சித்தத்தின் மூலம் அறிவதற்கு வழிகாட்டும் ஆதார சுருதிகளாக உபநிடதங்கள் காணப்படுகின்றன. இவற்றிலேயே மெய்யியல் ஆராய்ச்சிகள் முதன்முதலில் தோற்றம்பெற்ற தன்மையையும் அறியமுடிகின்றது. அத்துடன், தனி மனிதனது வாழ்க்கை, வாழ்வின் அர்த்தங்கள், உயர்ந்த இலட்சியங்கள் என்பவற்றினை அறிவு பூர்வமாக தெளிந்து ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப்பக்குவத்தினை வழங்கவல்லனவாகவும் உபநிடதங்கள் காணப்படுகின்றன. இவை மனதைப் பலப்படுத்தி மனிதனை மேம்படுத்தும் சிந்தனைகளைக் கொண்டு காணப்பட்டன. இப் பின்னணியிலேயே நீட்ஷேயின் சிந்தனையும் உருவானது என அறியலாம்.

நீட்ஷே கிறிஸ்தவ சமயக் கருத்துகளில் நம்பிக்கை இழந்து, ஷோபன்ஹவர், போல் டொய்சன், மக்ஸ் முல்லர் போன்ற பல சிந்தனையாளர்களின் நூல்களை வாசிப்புக்குட்படுத்தி கீழைத்தேய சிந்தனைகளான ஆரம்பகால உபநிடதங்களிலும், பௌத்தத்திலும் ஆர்வத்தைச் செலுத்தினார். இவ்விடயங்களை தனது எழுத்துக்களிலும் கொண்டுவந்ததோடு, அறிவிலும், ஆற்றலிலும் மேம்பட்ட அதிமானுடத் தளத்தினை உருவாக்க முனைந்தார்.

## 2. ஆய்வின் நோக்கம்

இவ் ஆய்வு ஆரம்பகால உபநிடத சிந்தனைகளின் தனிச் சிறப்புக்கள் எவ்வாறு நீட்ஷேயினால் விளங்கிக்கொள்ளப்பட்டு அவரது அதிமானுடக் கருத்தாக்கத்தினை வடிவமைப்பதில் பங்களிப்புச் செய்துள்ளது என்பதனை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு காணப்படுகின்றது.

## 3. ஆய்வு முறை

இவ் ஆய்வின் தரவுகள் நீட்ஷேயின் மூல எழுத்துக்களையும், அவற்றின் மொழிபெயர்ப்புக்களையும், அவற்றினைத் தழுவி எழுதப்பட்ட நூல்களையும் அத்துடன், ஆரம்பகால உபநிடதம் சார்ந்து எழுதப்பட்ட அடிப்படை நூல்களையும், அது சார்ந்த முன்னைய ஆய்வுகளையும் பெரிதும் பயன்படுத்துகின்றது. ஆய்வானது ஒப்பாய்வு முறை, விளக்கமுறை ஆய்வு மற்றும் விமர்சன முறை போன்ற ஆய்வு அணுகுமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

## 4. பகுப்பாய்வு

உபநிடதங்கள், இந்திய மெய்யியல் மரபில் மிகவும் முக்கியமான மூன்று ஆதாரங்களான உபநிடதம், பகவத்கீதை, பிரம்மசூத்திரம் ஆகியவற்றில் ஒன்றாகும். இந்து சமயத்திற்கும் தேவையான மிகவும் உண்மையான பழமையான எல்லாக் காலத்திற்கும் பொருந்தி விளங்கும் மெய்யியல் சிந்தனைகளைக் கொண்டமைந்ததாகவும் காணப்படுகின்றது. உபநிடதங்களில் உள்ள உண்மைகள் கடல் போன்று பரந்து விரிந்து ஆழமானவையாகும். உபநிடதங்கள் இன்று இருநூறுக்கும் மேற்பட்டதாகக் காணப்படுகின்றபோதிலும் 12 உபநிடதங்கள் முக்கியமானவை, அவற்றினை 3 காலகட்டங்களாகப் பாகுபடுத்துகின்ற போல் டொய்சன், தனது உபநிடத மெய்யியல் நூலிலே ஆரம்பகால உபநிடதங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார்; “பிருகதாரணியக மற்றும் சாந்தோக்கிய உபநிடதம், தைத்திரிய உபநிடதம், ஐதரேய உபநிடதம், கௌசதீக உபநிடதம், கேன உபநிடதம் போன்றவையே ஆரம்பகால உபநிடதங்களாகும்” (Deussen, P. (1919) The Philosophy of The Upanishads. Trans. Geden, A. S., p.23).

மிக ஆரம்பத்தில் தோன்றிய பிரகதாரணியக, சாந்தோக்கிய, தைத்திரிய, ஐதரேய, கௌசதீக, கேன மற்றும் கடோபநிடதம் போன்றவற்றையே இவ் ஆய்வுக் கட்டுரை பிரதானப்படுத்தப்படுகின்றது. இவ் உபநிடதங்கள் புத்தரது காலத்திற்கும் (கி.மு 6)

முற்பட்டவையாகக் காணப்படுவதோடு, இவ் உபநிடதங்கள் பற்றி ஹிரியண்ணா குறிப்பிடும்போது; "சடங்குகளுக்கு வேறுபட்டதாயும், எதிர்ப்பு என்று சொல்லக் கூடியதாகவும் உள்ள போக்கே இவற்றில் முதன்மையாக உளது. பிராமணங்களில் உள்ள அறிவுரைக்கு அடிப்படையாக அமைந்த பிரபஞ்சக் கொள்கைக்கு முற்றிலும் வேறான கொள்கையை உபநிடதங்கள் கொண்டுள்ளன. முந்திய உபநிடதங்களில் யாதாவதொரு வகையில் இவ்வெதிர்ப்புச் சுட்டிக்காட்டப்படுகிறது" (ஹிரியண்ணா, எம். (2008) இந்திய மெய்யியல். மொ.பெ. தேவசேனாதிபதி, வ, ஆ. ஷண்முகசுந்தரம், வ, நா., ப.43).

முற்கால உபநிடதங்களில் முற்று முழுதான உண்மை பற்றிய ஆராய்ச்சிகளே முக்கியம் பெற்றன. இங்கு உயர்ந்த அடிப்படையாகப் பிரம்மம் காணப்பட்டது. அது போன்றே மனிதனை இயக்கும் சக்தியாக ஆன்மா காணப்பட்டது. ஆன்மாவினை மேலும் பலப்படுத்தி உயர் நிலையினை அடைவதற்கான அறிவு பூர்வமான சிந்தனா ஆராய்ச்சியே இங்கு முக்கியம் பெற்றது. மாறாக ஏற்கனவே காணப்பட்ட கடவுள் பற்றிய கருத்துக்களோ, சடங்கு முறைகளோ இங்கு முக்கியம் பெறவில்லை. முக்கியமாக உபநிடதங்கள் வேள்வியினை மறுதலிக்கின்றன. இச் சடங்குகளால் உண்மையான நன்மை விளையுமென எவன் நம்புகிறானோ அவன் முட்டாள்: மீண்டும் மீண்டும் அவன் முதுமைக்கும் இறப்பிற்கும் கட்டாயம் உள்ளாவான் எனக் கூறுகின்றது. இதனால் மனிதனை மையப்படுத்திய, அவனை அறிவு பூர்வமாக மேம்பட்ட நிலையினை அடைவதற்கான வழிகாட்டி மார்க்கமாகவே ஆரம்பகால உபநிடதங்கள் காணப்பட்டன.

இவ்வாறானதோர் கருத்தாக்கம் நீட்ஷேயினது சிந்தனைகளிலும் வெளிப்பட்டன. மனிதனை பலப்படுத்துவதன் மூலம் அதிமானுடத் தளத்தினை உருவாக்க முடியும் என்ற கருத்துக்களை முன்வைத்த நீட்ஷே, மனிதனைப் பலவீனப்படுத்திய கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளினை மறுதலித்து கடவுள் இறப்பினையும் அறிவித்து, பலவீனமடைந்து சென்ற மனித இருப்பையும், வாழ்வினையும் மீளக் கட்டுமானம் செய்தார். குறிப்பாக, நீட்ஷே "கடவுள் இறந்துவிட்டார்" என அறிவித்ததோடு, கிறிஸ்தவ சமயம் சார் மூடநம்பிக்கைகளுள் கட்டுண்டு வாழ்ந்த மக்களை அத்தகைய நம்பிக்கைகளிலிருந்து விடுவிக்க அவர்கள் பலம் பெறவேண்டும் என்றார்.

மேலும், ஒவ்வொரு மனிதனதும் வாழ்க்கைக்கு உபநிடதங்கள் உற்ற துணைகளாகவும், ஒப்புயர்வற்ற வழிகாட்டிகளாகவும் உள்ளதும் அவதானிக்கத்தக்கது. உபநிடதங்கள் காட்டும் வாழ்க்கை நெறிகளில் வாழ்ந்தால் உறுதியாக உன்னதமான நிலைக்கு உயர முடியும். உபநிடதங்களின் உன்னதமான வாழ்க்கை இலட்சியம் அதனை உணரக்கூடிய வகையில் உண்மையுடனும் உற்சாகத்துடன் படிப்பவர்களுக்கு கண்டிப்பாகப் புரியும். அவர்கள் உள்ளம் உருகி அதனை உணர்ந்து வாழ்க்கையில் உயர்வடையவும் வழிவகுக்கின்றன. மேலும், உபநிடத உண்மைகள் உலகத்தில் வாழும் அனைவருக்குமே மிகவும் தேவையான சத்திய வாக்குகளாகும். அவைகள் ஒரு நாட்டினருக்கோ, அல்லது ஒரு சமூகத்தினருக்கோ அல்லது ஒரு இனக் குழுமத்திற்கோ அல்லது ஒரு காலத்திற்கோ என தனியாக ஏற்படுத்தப்பட்டவைகள் அல்ல. உபநிடத உண்மைகள் அனைத்து மக்களுக்கும் எல்லாக் காலத்திலும் பயன்படும் மிகச்சிறந்த ஆதார உண்மைகள் ஆகும். பிராமணங்களின் சலிப்பூட்டும் சடங்குமுறைகளுக்கு அப்பால் மனதிற்குத் தெம்பூட்டும் விடயங்கள் இவற்றில்தான் காணப்படுகின்றன. இதனை ஜானகி ராமன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்; "உபநிடதங்கள் காட்டும் வாழ்க்கையில் மனிதர்கள் உறுதியாக நடந்தால் கண்டிப்பாக வாழ்க்கையின் பூரணத் தன்மையை அடைவார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்" (ஜானகிராமன், கிரி. ஆர். (2002) இன்றைய புதிய கோணங்களில் உபநிடதங்கள். ப. 9).

இவ்வாறு மனிதனின் பூரணத்துவம் தொடர்பான கருத்துக்கள் உபநிடதங்களின் கருப்பொருளாக காணப்பட்டதுடன், அவ்வாறானதோர் முழுமனித தளத்தினை உருவாக்குவதில் முனைப்புடன் செயற்பட்ட நீட்ஷேயிற்கும், அவரது சிந்தனைகளிற்கும் உபநிடத சிந்தனைகள் ஆதாரமாயின எனக் கருதலாம். நீட்ஷேயினுடைய இந்தியப் புரிதல் ஷோபன்ஹவருடன் நீட்ஷேயிற்கு இருந்த பாரிய தொடர்புகளின் மூலமும் வெளிப்பட்டது. நீட்ஷே ஓர் மேலைத்தேய சிந்தனையாளர். எனினும், அவரது சிந்தனைகள் அவருக்கு முன்பு வாழ்ந்த மெய்யியலாளர்களின்

சிந்தனைகளிலிருந்து வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. தனது வாழ்க்கைக் காலத்திலே கிறிஸ்தவராக இருந்து கொண்டு கிறிஸ்தவக் கோட்பாடுகளை அர்த்தமற்றவை என எதிர்ப்பவராகக் காணப்பட்டார். இந்தப் பின்னணியில் கிறிஸ்துவுக்கு எதிரான (The Antichrist) என்ற நூலையும் எழுதியிருந்தார். இறுதிவரை அவர் கிறிஸ்தவத்திற்கு எதிரான போக்கினையே கொண்டிருந்தார் என்பதற்குச் சான்றாக சகோதரியுடன் மேற்கொண்ட உரையாடலைக் காணமுடிகின்றது; "லாமா, நான் நிச்சயம் செத்துப் போய்விடுவேன் என்றே எனக்குத் தோன்றுகிறது. அப்படி நான் இறந்து போனால் நண்பர்களையும் உறவினர்களையும் தவிர வேறு யாரையும் என்னிடம் அணுக விடாதே. எந்தப் பாதிரியும் வேத புத்தகமும் ஜபமாலையுமாக வந்து என்னருகே மண்டிபோட்டு எனக்காக ஜபிக்கக் கூடாது. புரட்டான பிரார்த்தனைகளை யாரும் எனக்காக என்னருகில் நின்று கொண்டு கூறாதபடி பார்த்துக்கொள்; ஏனெனில் என் ஆவி பிரிந்த பிறகு என்னால் அவற்றை மறுக்கமுடியாமற் போய் விடுமல்லவா….." (மன்னன், மலர். (2004) சிந்தனையாளர் நியெட்ஸே. ப. 39).

…………"பணிந்து போவதையும், அடக்கங் காட்டுவதையும் அன்பு செலுத்துவதையும் வலியுறுத்தும் கிறிஸ்தவ சமயம், அதன் மூலமாக மனித இனத்தை பலஹீனப்படுத்தி விட்டதாகக் குற்றஞ் சாட்டினார் நீட்ஷே. வலிமை மிக்கவர்கள் கிடைத்தற்கரிய தங்கள் வலிமையைப் பயன்படுத்திக் கொண்டு இலட்சிய சித்தியை அடைவதற்கு இடையூறாக இம்சை செய்யாமை, கொல்லாமை போன்ற போதனைகளைக் கூறி, பலஹீனர்களுக்குச் சாதகமாக அந்த சமயம் வழக்காடுவதாகவும், ஆகவே தான் வன்மையுள்ளவர்கள் பலஹீனர்களுக்குச் சமதையாக மட்டுமின்றி அவர்களுக்குக் கட்டுப்பட்டும் நடக்க வேண்டியிருப்பதாகவும் குறை கூறினார் அவர். மனித இன உய்வுக்கு வைரி என்று கிறிஸ்துவ சமயத்தைச் சாடிய நீட்ஷே, இந்து சமயத்தின் தத்துவ சாத்திரங்களான உபநிடதங்களைப் பெரிதும் போற்றினார். தம்முடைய அந்தப் போற்றித் திருவகலுக்குக் காரணம், அவை திடசித்தத்தையும், தேக வன்மையையும் வற்புறுத்தி, கொல்வதோ, கொல்லப்படுவதோ இரண்டுமே தவறாகாது – அது இயற்கை நியதி என்று தனக்கு முற்றிலும் சாதகமான கருத்தைக் கூறுவதும், விலங்கினத்திலிருந்து தோன்றிய மனிதன் தனது சொந்த முயற்சியால் மேலும் உயர்ந்த இனமாக விளங்கக்கூடும் என்று அறிவிப்பதுந்தான் என்று தெளிவுபடுத்தினார் நீட்ஷே (மேலது, ப. 59).

இவ்வகையில் நீட்ஷே கிறிஸ்தவ சமயத்தின் கோட்பாடுகளில் கொண்டிருந்த நம்பிக்கையற்ற தன்மையானது அவரது வாழ்க்கைக் காலத்தில் மட்டுமல்லாது இறப்பின் பின்னரும் தனது வாழ்வுடன் தொடர்புபடக்கூடாது என்பதில் உறுதியான கருத்தினைக் கொண்டிருந்தமையினை அறிய முடிகின்றது. இவ்வாறான சிந்தனைகளும் இவரிற்கு உபநிடத உயர் உண்மைகளில் ஆர்வத்தினைச் செலுத்த ஏதுவாக காணப்பட்டிருக்கலாம். அதேபோன்று கிறிஸ்தவத்தின் பலவீனங்களை எடுத்துக்காட்டுவதோடு, பலத்தினை வழங்கவல்ல, மன வலிமைக்கு முக்கியத்துவம் தருகின்ற உபநிடதங்களைப் பெரிதும் முக்கியப்படுத்தும் கருத்துக்களை அவர் வெளியிட்டுள்ளார். 19 ஆம் நூற்றாண்டின் சிந்தனையாளரான இவர் இந்திய சிந்தனை மரபில் குறிப்பாக, உபநிடதம், பௌத்தம் தொடர்பான அறிவினையும், வாசிப்பினையும் ஜேர்மனிய மொழியில் மேற்கொண்டு அவற்றினால் கவரப்பட்டு தனது நூல்களிலும் அவற்றின் மெய்யியல் அடிப்படைகளை பயன்படுத்தியிருக்கலாம் என்பது அவரது நூல்களினூடாகத் தெளிவாகின்றது. நீட்ஷேயிற்கு உபநிடதங்கள் மீதான தொடர்பானது அவரது நூல்களில் வெளிப்படுகின்ற அதேவேளை, அதிகளவில் உபநிடத மெய்யியற் சிந்தனைகளை ஒத்த ஓர் சிந்தனைப் பாங்கினை எங்கும் காணமுடிகின்றது. குறிப்பாக ஆன்ம பலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒவ்வொரு மனிதனும் வலிமையைப் பெற்று உயர்நிலையை எட்ட முடியும் என்ற கருத்தாக்கமாகும். இக் கருத்தினை சுவாமி விவேகானந்தரும் பின்வருமாறு கூறியுள்ளார்; "உபநிடதங்கள் அளவற்ற பலத்தை அளிக்கும் சுரங்கங்களாக இருக்கின்றன. உலகம் முழுதிற்கும் பலம் அளிக்கக் கூடிய சக்தி அவைகளில் இருக்கின்றன. அவைகளின் மூலம் உலகம் முழுதிற்கும் புத்துயிரும் புது உணர்ச்சியும் புதுச் சக்தியும் அளிக்க முடியும். எல்லாச் சமயங்களிலிருக்கும் பலவீனங்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் அவை பேரிகைக் கொட்டி அழைத்து, 'ஆண்மையுடன் எழுந்து நின்று விடுதலையடையுங்கள் என்று உரக்கக் கூறுகின்றன. விடுதலை – பூரண சுதந்திரம் - உடலுக்கு,

மனதுக்கு, ஆன்மாவுக்கு – அதுவே உபநிடதங்களின் மூல மந்திரமாகும்'' - சுவாமி விவேகானந்தர் (சட்டோபாத்யாயா, தேவி. பிரசாத். (2008) *இந்தியத்தத்துவம்: ஓர் அறிமுகம்.* மொ.பெ. கிருஸ்ணமூர்த்தி, வெ., ப.12).

இக் கருத்தினை மலர் மன்னனும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்; ''தன்னுடைய மதத்தை துவேஷித்த நீட்ஷே, இந்திய உபநிடதங்களைப் போற்றிப் புகழ ஆரம்பித்தான். ஏனெனில் சாதாரண மனிதனுக்கு ஏக சித்தத்தையும், வலிமையையும், செயல் முனைப்பையும் போதிக்கும் அவைகள், தாம் கூறும் முறைப்படி நடந்து கொள்வதால் படிப்படியாக உயர்ந்து கடவுளாக மாறிவிடலாம் என்றல்லவா உறுதி கூறுகின்றன! சாமான்ய மனிதனும் கடவுளாகிவிடலாம் என்று உலகில் வேறெந்த வேதமும் கூறவில்லையே!'' (மன்னன், மலர். (2004) அதே நூல், ப.30).

இவ்வாறு உபநிடதங்களில் அறிவுக்கு முன்னுரிமை கொடுக்கும் கருத்துக்களும், உற்சாகத்தினை வலியுறுத்தும் பாங்கான விடயங்களும் முக்கியம் பெறுகின்றன. நீட்ஷேயினது சிந்தனைகள் எங்கும் உள்ள விடயங்களின் சாரமாக பலத்திற்கும் - பலவீனத்திற்கும் இடையிலான போராட்டமாகவும், இறுதியில் வலிமையே வெல்வதாக அமைகின்றமையினால் இவற்றினது செல்வாக்குகள் காணப்பட்டிருக்கலாம். முக்கியமாக நீட்ஷேயின் 'துன்பியலின் பிறப்பு' (The Birth of Tragady) நூலில் வலிமையின் வகை மாதிரியாக டயோனிஸியஸையும், பலமற்ற ஒன்றாக அப்பலோவும் படைத்து இருவேறுபட்ட துருவங்களும் மோதி இறுதியில் வலிமையே வெல்வதாக அமையப்பெற்றுள்ளது.

ஷோபன்ஹவரது சிந்தனையே நீட்ஷேயிற்கு பிரதானமாக கீழைத்தேய மெய்யியல்கள் பற்றிய அடிப்படை அறிவையும், தெளிவையும் கொடுத்ததுடன், நீட்ஷேயின் சமகாலத்து நண்பரான போல் டொய்சனது சமஸ்கிருத மொழிப்பாண்டித்தியத்தினால் ஜேர்மனிய மொழியில் எழுதப்பட்ட கீழைத்தேய சிந்தனைகள் பற்றிய எழுத்துக்களும் உதாரணமாக The Philosophy of The Upanishads போன்றவை நீட்ஷேயிற்கு முற்பட்ட ஏனைய ஜேர்மனிய சிந்தனையாளர்களது கருத்தாக்கங்களும் குறிப்பாக இந்திய மெய்யியலைப் பற்றி அறியவும் அவரது தத்துவங்களில் அவற்றை பயன்படுத்தவும் காரணமாகியது. இவ்விடயம் பற்றி மலர்மன்னன் மேலும் குறிப்பிடுகையில்; ''தனக்குத் தேவையானது ஏகாக்கிரசித்தமே என்பதை ஷோபன்ஹவரின் வாயிலாகக் கண்டு கொண்டு விட்டான் நீட்ஷே. ஆனால், அந்த ஏக சித்தத்தின் குறிக்கோள் என்ன?

நீட்ஷே அதற்கு விடை காண அலைந்தான். சிந்தனையாளர்களின் நூற்களையெல்லாம் புரட்டிப் பார்த்தான். கிரேக்க புராணங்களையும், காவியங்களையும் ஆழ்ந்து கற்ற அவன். பண்டைக் கிரேக்க மக்கள் தேக வலிமைக்கே முக்கியத்துவம் கொடுத்துச் சிறப்பித்ததைக் கண்டறிந்தான். ஹிந்துஸ்தானத்து சமவெளிகளில் கீர்த்தியுடன் வாழ்ந்த ஆரியர்களின் உபநிடதங்களும், மற்ற தத்துவ சாஸ்திரங்களுங் கூட வலிமையையே வற்புறுத்தி அதையே விரும்பி வேண்டுவதை உணர்ந்து கொண்டான். ''உபநிடதங்கள் அளவற்ற பலத்தைக் கொடுக்கும் சுரங்கங்களாக இருக்கின்றன. உலகம் முழுவதற்கும் வலிமையினை வழங்கக் கூடிய சக்தி அவற்றில் பொதிந்து கிடக்கின்றது. வையம் முழுவதும் புத்துயிரையும், புத்துணர்வையும், புதிய சக்தியையும் ஊட்ட அவைகளால் முடியும். பலவீனத்தைப் பூண்டோடு ஒழித்து ஆண்மையுடன் எழுந்து நிற்க உடல், மனம், உயிர் ஆகிய மூன்றினுக்கும் அளவற்ற பலத்தைக் கொடுப்பதே அவற்றின் நோக்கம்'' என்பது அந்த ஜெர்மானியனுக்குப் புரிந்துவிட்டது'' (மேலது, ப.29).

இவ்வகையில் மனவுறுதியுடன் செயலாற்றுவதனால் உயர்ந்த இலக்குகளையும் அடைய முடிடியும் என்ற விடயத்தினை ஷோபன்ஹவரது சிந்தனைகளினூடாக அறிந்து கொண்ட நீட்ஷே, அதற்குத் துணையாக அவரது நூலில் முக்கியப்படுத்தப்பட்ட உபநிடத கருத்துக்களையும், நண்பனான போல் டொய்சனது ஜேர்மனிய மொழியிலமைந்த உபநிடதக் கருத்துக்கள் அடங்கிய குறிப்புக்களையும் வாசிப்புக்குட்படுத்தி அதன் மெய்யியல் அடிப்படைகளைப் புரிந்து கொண்டு அவரது சிந்தனைகளை வளர்த்துக்கொண்டார் எனக் கருதமுடிகின்றது. உபநிடதங்களில் கூறப்பட்ட உயர்ந்த சிந்தனைகளே அவரது 'அதிமானுடக்' கருத்தாக்கத்திற்கும் அடிப்படையாக

அமைந்திருக்கலாம் என்பது அவரது கருத்துக்களினை அடிப்படையில் வைத்து நோக்குகையில் புலனாகின்றது. இக் கருத்துக்களை மேலும் வலுச்சேர்க்கும் வகையில் கிரகம் பார்க்ஸினது குறிப்புக்களும் காணப்படுகின்றன. இவ்விடயம் குறித்து கிரகம் பார்க்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்; "உபநிடதம் மற்றும் பௌத்தம் என்பவற்றின் தீவிர மாணவராக இருந்த ஷோபன்ஹவரின் மீதுள்ள ஆரம்பகட்ட ஈர்ப்பும், சமஸ்கிருத கல்வியலாளரும் ஒப்பீட்டு மெய்யியலாளருமான போல் டொய்சன் உடனான நெருங்கிய அறிமுகமும் நீட்ஷேயிற்கு இதை (இந்தியப் பாரம்பரிய) சாத்தியமான உண்மைத் தன்மையுடன் ஊட்டியது. நீட்ஷேயினுடைய சொந்த எழுத்துக்களும், சமஸ்கிருத நூல்களிலிருந்து அவருடைய மேற்கோள்காட்டுக்களும் அடிக்கடி தோன்றும் சுருக்கக் குறிப்புக்களும் மிகவும் நம்பத்தக்கதாக பௌத்தத்தை ஆதரிப்பவையாகவும் காணப்படுகின்றது" (Parkes, Graham. (ed.), (1991) Nietzsche and Asian thought. London. p.76). ஆக, நீட்ஷே ஷோபன்ஹவரதும், டொய்சனதும் கருத்துக்களை ஏற்றுக் கொண்டமையும், அவற்றின் மூலம் ஆரம்பகால உபநிடத, பௌத்த உயர் உண்மைகளையும் பெற்று தனது சிந்தனைகளை வளர்த்துக் கொண்டார் என அறியலாம்.

இந்திய மெய்யியலின் ஆரம்பகாலமாகக் கொள்ளப்படும் வேதகாலத்தின் தோற்றுவாய் தொடர்பாக பல்வேறு அறிஞர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட போதிலும், ஜேர்மனிய சிந்தனையாளரான மக்ஸ் முல்லரது (Max Muller) ஆராய்ச்சி முடிவுகளே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மக்ஸ் முல்லரும் நீட்ஷே வாழ்ந்த காலப்பகுதியிலே வாழ்ந்து இந்தியாவைப் பற்றிய ஆழமான கல்வியியல் ஆய்வுகளை மேற்கொண்டு தெளிவான முடிவுகளை வழங்கியிருந்தார், இச் செல்வாக்கு நீட்ஷேயிலும் ஏற்பட்டிருக்க வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது. மேலும், ஜேர்மனிய சிந்தனையாளரும், நீட்ஷேயின் வாழ்நாள் நண்பருமான போல் டொய்சனால் எழுதப்பட்ட உபநிடத மெய்யியல் (The Philosophy of The Upanishads, 1906) நூலும் பிற்கால இந்திய மெய்யியல் ஆராய்ச்சிகளை மேற்கொண்டவர்களுக்கு வழிகாட்டியாக இருந்ததோடு, இன்றுவரை உபநிடத மெய்யியல் ஆராய்ச்சிகளுக்கான பிரதான மூலமாகவும் காணப்படுகின்றது. இங்கு உபநிடதங்களுக்கும் நீட்ஷேயிற்கும் இடையிலான இந்த உறவு நிலையானது, நீட்ஷேயின் சிறுகுறிப்புக்கள் மூலமே அதிகம் அறியப்படுகின்றது. நீட்ஷேயினுடைய பெரும்பாலான எழுத்துக்களில் அவர் அடிக்கடி, பிராமணிய (இந்துமதக்) கோட்பாடுகள் தொடர்பாக சாதகமான மேற்கோள்களைப் பாவிப்பதனைக் காணலாம். இவ்வாறு எண்ணிறைந்த தொடர்புகளும், வழிகாட்டுதல்களும் நீட்ஷேயிற்கு உபநிடதங்களின் கருத்தாழங்களைப் புரிந்து தனது சிந்தனைகளை முன்வைக்க அடிப்படையானது. இதனை கிரகம் பார்க்ஸ் மேலும் உறுதிப்படுத்துகின்றார்; "நீட்ஷேயினுடைய இந்திய சிந்தனை தொடர்பான பாரிய தாக்கமானது, அவருடைய போல் டொய்சனுடனிருந்த "வாழ்நாள் நட்புறவு" இன் காரணமானதும், நீட்ஷேயின் வெளியிடப்பட்ட எழுத்துக்களிலுள்ள இந்தியக் கருத்தாக்கங்கள் ஒரு பெறுமதியை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. எனவும் மிக இயல்பாக முடிவு செய்கின்றது" (Ibid. 77).

இவ்வாறு நீட்ஷேயினது வாழ்வின் படிநிலைகளில் நண்பர்களதும், சமகாலத்தவர்களதும் இந்திய சிந்தனைகள் தொடர்பான பார்வையும், கருத்துக்களும் அவரது சிந்தனைகளுக்கும் அடிப்படைகளை வழங்கியிருக்க வாய்ப்புள்ளது. பிராமணிய கருத்தாக்கம் பாரிய அளவில் நீட்ஷேயைக் கவர்ந்திருந்தது. இந்தியாவில் உபநிடதங்களில் உயர்குடியில் பிறந்து, வாழ்ந்த அரசர்களையும் (சத்திரியர்கள்), பிராமணர்களையும் பற்றிய உரையாடல்கள் அதிகளவில் காணப்படுகின்றது. ஹிரியண்ணா இக்கருத்தினை கூறுகையில்; "உபநிடதங்களின் தனிச் சிறப்பான கொள்கைகளுள் ஒன்றுக்கு மேலாகவே அரச குடியினரிடமிருந்து பெறப்பட்டனவாகவும், இவற்றைப்பற்றிய அறிவுரைக்காகப் பிராமணர்கள் அவர்களை நாடியதாகவும் உபநிடதங்கள் பேசுகின்றன" (ஹிரியண்ணா, எம். *(2008)* அதே நூல், மொ.பெ..தேவசேனாதிபதி, வ. ஆ., ஷண்முகசுந்தரம், வ. நா., ப.44*)*.

அக்காலத்தில் கல்வியறிவு படைத்தவர்களாக உயர்வகுப்பினர் காணப்பட்டிருக்கலாம். ஆதலால் அவர்தம் விடயங்களும் உபநிடத மகாவாக்கியங்களில் இடம்பெற வாய்ப்பு உள்ளது அவ்வாறே நீட்ஷேயினது கருத்துக்களிலும் வலிமை, உயர்ந்த வாழ்க்கை, மனிதர்களில் மேம்பட்ட அதிமானுடத் தளத்தை உருவாக்கல் போன்றனவே காணப்பட்டன. இவையும் இந்திய உபநிடத

சிந்தனைகளின் தாக்கத்தினால் உருவாகியிருக்கலாம். உபநிடதங்களில் முக்கியமானதாக விளங்குகின்ற சாந்தோக்கிய உபநிடதமானது உயர்நிலைப்பட்ட மனிதத் தன்மையை விளக்குகையில்; '(ஆத்ம) பலம் விஞ்ஞானத்தைக் காட்டிலும் பெரிது. ஒரு பலவான் நூறு விஞ்ஞானவான்களை ஆட்டி வைக்கக்கூடும். ஒருவனுக்கு பலம் வந்தால் அவன் எழுவான், எழுந்து சேவை செய்வான், சேவை செய்து நல்லோர்களிடம் நெருங்குவான், நெருங்கிப் பார்ப்பவனாயும் கேட்பவனாயும் சிந்திப்பவனாயும், அறிபவனாயும் அனுஷ்டிப்பவனாயும், தெளிபவனாயும் ஆகிறான். பலத்தால் தான் பூமி நிலைபெறுகிறது் பலத்தால் தான் அந்தரிஷமும் பலத்தால் தான் வானுலகும் பலத்தால் மலைகளும், பலத்தால் தேவர்களும் மனிதர்களும் பலத்தால் பசுக்களும் பறவைகளும் புற்பூண்டுகளும் மரங்களும் மிருகங்களும் புழுக்களும் பூச்சிகளும் எறும்புகளும் பலத்தால் உலகம் நிலை பெறுகிறது. பலத்தை உபாசிப்பாய்.' (அண்ணா. *(1957)* உபநிஷத்ஸாரம் - இரண்டாம் பாகம், 'சாந்தோக்கிய உபநிடதம்' *8.1*, பக். *76 – 77*).

இவ்வாறு பலத்தினை முனைப்புப்படுத்துவதான விடயங்கள் சாந்தோக்கிய உபநிடதத்தில் முக்கியப்படுத்தப்படுகின்றமையினை அறியமுடிகின்றது. அவ்வாறான சிந்தனைகளின் தாக்கம் நீட்ஷேயிற்கும் ஏற்பட்டிருக்கலாம். நீட்ஷேயினது வல்லமைக்கான மனவுறுதி நூலானது மனவுறுதியின் மூலமே நிலையான இன்பத்தினைப் பெறமுடியும் என்கின்றது. இது பலத்தின் உயர்ந்த வெளிப்பாடாகவும் கருதப்படுகின்றது. இதனை நீட்ஷே பின்வருமாறு குறிப்பிடுகிறார்; "மனஉறுதியானது (Will) வலிகள் துன்புறுதல் என்பவற்றைக் கடந்தும் ஒருபோதும் திருப்தியடையச் செய்யப்படுவதில்லை. "தடைக்கு எதிராக" விரிவடைந்து வளரும் ஒரு உந்துவிசையானது மகிழ்வுக்கு இட்டுச்செல்கிறது." (Nietzsche, F. (1968) The Will To Power, (Vol - 14). Trans. Kaufmann, W. & Hollingdale, R. J., p.374).

இவற்றிலிருந்து மனவுறுதி, பலத்தின் மூலமே இறுதியான இன்பம் கிடைக்கப் பெறுவதாகவும், அதுவே மனிதனை உயரிய நிலையினை அடைவதற்கு வழிகாட்டுவதாகவும் அமைகின்றது என்ற கருத்து வெளிப்படுகின்றமையினை அவதானிக்கலாம். மேலும் நீட்ஷேயினது சிந்தனைகள். எழுத்துக்களில் பரவலாக உபநிடதங்களின் கருத்தாக்கங்களைக் காண முடிகின்றது. இவ்விடயத்தினை மலர்மன்னன் பின்வருமாறு கூறுகின்றார்; "ஏவல் திறமையுள்ளவனாயும், திடசித்தமும், உடல் வன்மையும் மிகுந்தவனாயும் பூமி முழுவதையும் தனதாக்கிக் கொள்ளும் மனிதன் கந்தர்வனாயும், தேவ கந்தர்வனாயும் கர்ம தேவனாயும் படிப் படியாக உயர்வதை விளக்கிய உபநிடதங்கள் அவனுக்குப் புதியதோர் உண்மையைப் பகன்றன. தைத்திரிய உபநிடதத்தின் இரண்டாவது பிரவசனமான ஆனந்தவல்லியின் எட்டாவது சுலோகத்தில் இந்தக் கருத்து பிரதிபலிப்பதைக் காணலாம். அதைப் புரிந்து கொண்டதும், "மனிதனுக்கப்பால் மற்றோர் உயிரினம் எஞ்சியிருக்கிறது!" என்று நம்பலானான். "உயிரினம் படிப்படியாக வளர்ச்சி பெற்றதை ஒப்புக் கொள்ளும் இந்த உபநிடதங்கள் மனிதனுக்கு அடுத்துள்ள இனங்களைப் பற்றி அறிவிப்பது உண்மையாக இருக்கக்கூடும் என்றே அவனுக்குத் தோன்றியது." (மன்னன், மலர். *(2004)* அதே நூல். ப.*30*).

சாந்தோக்கிய உபநிடதமானது உயர்நிலைப்பட்ட மனிதத் தன்மையை விளக்குகையில்; "இந்தப் பிரம்மஞானத்தை யறிந்தவன் எவனோ அவனுக்கு (ஞான) சூரியன் உதிப்பதுமில்லை, அஸ்தமிப்பதுமில்லை. அவனுக்கு எப்போதும் ஒரே பகலாகவே இருக்கும்" (அண்ணா. *(1957)* அதே நூல், ப.*13*). என்று கூறுகிறது.

இவ்வாறு உபநிடதங்கள் மனிதனுக்கப்பால் இருக்கின்ற உயர்ந்த சக்தியினைப் பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ளமையும், அவ்வாறான ஓர் உயர்ந்த நிலையில் அவனே அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பான் என்ற கருத்துக்களையும் முன்வைத்துள்ளமையானது நீட்ஷேயினது அதிமானுடக் கருத்தாக்கத்திற்கும் தூண்டுகோலாக அமைந்துள்ளதை அறிய முடிகின்றது. உபநிடதங்கள் குறிப்பிடுவதனைப் போன்று அவ் மனிதன் பலமானவனாகக் காணப்படுவான், தேவையற்ற அறியாமைகளை விடுத்தவனாகவும் இருப்பான். இவ்வாறான

சிந்தனைகளைப் பற்றி நீட்ஷே தனது ஜராதுஷ்ட்டிரன் நூலிலும் முக்கியப்படுத்தியுள்ளார்; "கட்டுக்கதைகளை இயற்றுபவர்களிலும், கடவுளுக்காக ஏங்குபவர்களிலும் நிறைய நோயாளிகள் எப்போதும் இருந்திருக்கிறார்கள் அவர்களுக்கு ஞானமடைந்த மனிதனிடமும், நற்பண்புகளிலேயே மிகவும் இளையதான நேர்மையிடமும் மூர்க்கமான கோபம் இருக்கிறது" (நீட்ஷே. (2006) ஜரதுஷ்ட்ரா இவ்வாறு கூறினான். மொ.பெ. ரவி., ப.52). என்ற நீட்ஷேயின் கருத்தில் அதிமானுட சிந்தனையை ஞானமடைந்த மனிதன் மற்றும் நேர்மை என்றவாறாக முக்கியப்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

ஜனநாயக உலகிலிருந்தும், ஐரோப்பாவின் கைத்தொழிற் புரட்சியிலிருந்தும் தனது சொந்த சமூகப் பிரிவுகளை பல தளங்களில் உருவாக்கிய கிறிஸ்தவ சமயச்சார்பு முறைமையிலிருந்தும் நீட்ஷே விலகியிருந்தார் என்பதையும் கட்டாயம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இவ்விடயம் குறித்து டன்ரோ பின்வருமாறு குறிப்பிடுகின்றார்; "மேலைத்தேய வாசிப்பாளருக்கு பிராமணியமுறை எச்சரிக்கை ஊட்டுவதும், அசௌகரியமானதுமாக இருப்பது போன்று நீட்ஷேயின் நிலப்பிரபுத்துவ மறுமலர்ச்சிக்கான அழைப்பானது காணப்படுகின்றது என்று சொல்வதற்கில்லை. நீட்ஷேயின் கருத்துக்களை முன்நிறுத்தியும், ஒழுங்கமைக்கப்பட்ட கிறிஸ்தவ திருத்தலங்களின் தேவைப்பாடு இல்லாமலும் உள்ள ஓர் வெற்றியடைந்த சமுதாயத்தில் இவ்வாறான எண்ணக்கருத்துக்களை கோட்பாடு ரீதியில் ஆராயவேண்டும்" (Danto. A. C. (1987) Mysticism and Morality: Oriental Thought and Moral. p. 41).

அதாவது, கிறிஸ்தவ சிந்தனைகளை மேலைத்தேயம் ஏற்றுக்கொண்ட போதும் நீட்ஷே அவற்றிலிருந்து விலகியதான ஓர் நடைமுறையினைக் கொண்டிருந்தமையினால் அவை குறித்து தெளிவான ஓர் புரிதலுடனே நீட்ஷேயினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது சிந்தனைகளிலும் பயன்பட்டிருக்கும் என்பது உறுதியாகின்றது. நீட்ஷேயின் கருத்தாக்கம் யாதெனில் மனிதன் தனது வாழ்க்கையில் அவனுடைய பங்குபற்றுகையை விளங்கிக்கொள்ளும் போது மனித இனம் அதுவாகவே உயரிய வாழ்க்கைப்படிநிலையை நோக்கி மாறுதலடையும் என்பதாகும். இந்திய சமூக அமைப்பும், அதனுடைய அதிகாரப்படிநிலையும் உயர்குடி மக்கள் உயர்ந்த இடத்தில் இருப்பதை உறுதி செய்கின்றது. இக் கருத்தினை தேவி சட்டோபாத்யாய கூறுகையில்; "உபநிடத உண்மைகளின் படி வாழ முயலும் போதே நமக்குக் கருமத்தளைகள் தாமாகவே தளர்கின்றன. இமயத்தின் மேல் ஏறி செல்பவனுக்கு கீழே தரையில் உள்ள வித்தியாசங்கள் மறைந்தும் மறந்தும் போவது போல் சமூகத்தின் சகல வேற்றுமைகளும் விதி விலக்குகளும் விலகுகின்றன. அதனால் சம தரிசனமும் அளவற்ற ஆன்ம பலமும் சித்திக்கின்றன. அதுவே நமக்கு இன்று மிகமிகத் தேவைப்படும் ஒன்றாகும்" (சட்டோபாத்யாயா தேவி. பிரசாத். (2008) அதே நூல், மொ.பெ. கிருஸ்ணமூர்த்தி, வெ., ப. 12).

மேற்கருத்தில் உபநிடதங்களின் உயரிய கருத்துக்களின் மூலம் கிறிஸ்தவ திருச்சபையானது முக்கியப்படுத்தும் அற விழுமியங்களுக்காக இயற்கைக்கு மாறாக மனிதனை கட்டுப்படுத்தி வைத்திருப்பதிலிருந்து விடுபட்டு மனிதனை மீண்டும் இயற்கைக்குள்ளும், அதனைச் சுற்றியுள்ளவற்றிற்குள்ளும் கொண்டுவருவதன் மூலம் கலாச்சார முன்னேற்றத்தை அடையலாம் என்பது நீட்ஷேயினுடைய நிலைப்பாடாகும் என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. இதற்கு நீட்ஷே சமூக அமைப்பிலுள்ள அதிகாரப்படிநிலையை ஒத்த ஓர் முறையே நியமிக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றார். பிராமணியத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள மனுதர்மசாஸ்திரங்கள் நீட்ஷேயிற்குத் தனது ஆரம்பகால கிறிஸ்தவ சமய ஈடுபாட்டிலிருந்து விடுபடுவதற்கு ஓர் வழியினை வழங்கியிருக்கின்றன எனக்கருதலாம். மனுதர்மசாஸ்திரமானது ஐரோப்பிய சமூக முறைமைகளிலிருந்து வலிமையாக வேறுபட்டு நிற்கின்றன. நீட்ஷேயின் பணியானது வலிமையான ஒப்பிடுதல்களின் மூலம் இதனைத் திறனாய்வு செய்வதேயாகும். இதை 'Twilight of the Idols' எனும் கட்டுரையில் காணலாம்; "ஐரோப்பிய புதிய ஏற்பாடானது மனுதர்மசாஸ்திரத்துடன் ஒப்பிடும் போது எவ்வளவு சிதைவடைந்துள்ளது" "எவ்வளவு துர்நாற்றம் அடிக்கின்றது" (Nietzshe, F. (1997) Twilight of the Idols.Trans. Polt, R., p.41).

இத்தகைய பலமான திறனாய்வுச் சிந்தனையானது நீட்ஷேயினுடைய மனித இனத்திற்குரிய மாற்றத்திற்கான அவசர அழைப்பாக முன்னிலைப்படுத்தப்படுகிறது. எனினும், இது இந்து சமய ஐதீகங்களில் இடம்பெறும் மாற்றத்தினை விடவும் கைத்தொழில் புரட்சியினால் கடும் சுமைகளை சுமக்கும் மனித இனத்துக்குரியதாகும். நன்மை தீமை பற்றிய எண்ணக்கருக்களுடன் எங்களை வலிமையாகப் பிணைக்கும் ஓர் உலகில், அடிப்படை இயல்புகளுக்கு மீறி வாழ்தலுக்கு தகுதியானவர்கள் என நினைத்துக்கொண்ட மந்தைகளுள் ஒருவராக வாழ்வதைவிட, மந்தைகளுள் மந்தையாக வாழ்ந்து மந்தைக் கூட்டத்தை அதீத மனிதனாக உருவாக்குவதற்கு துணைபோதல் சிறந்ததாகும். இக் கருத்தினை சிங்கர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்; ''நன்மை தீமைகளைக் கைவிட்டு பேரவாக் கொள்ளாமலும், புலம்பாமலும், மகிழ்வடையாமலும், வெறுக்காமலும் இருக்கும் ஒருவர்….. ஈர்க்கப்படாமல், கவலையடையாமல் ஒன்றிலேயும் தங்கியிருக்காமலும் இருக்கும் ஒருவர்….மகிழ்ச்சி – துன்பங்களில் சமமாக இருக்கும் ஒருவர்… உயிரினங்களை வெறுக்காமலும், நட்புடன் கூடிய இரக்கமுள்ளவராகவும் ஆக்கிரமிப்புக் கொள்ளாமலும், தற்பெருமை இல்லாமலும் இருக்கும் ஒருவர்…. போன்ற கிருஸ்ணருடைய வார்த்தைகளில் வெளிப்படும் இவ்வாறான உதாரணங்கள் நீட்ஷேயினுடைய எண்ணக்கருக்களுடன் ஒத்துப்போவதைப் பகவத்கீதையின் மாதிரிக்கமைந்த ஒரு ஒழுக்கமான நபரை பரீட்சிக்கும் போது புலனாகின்றது'' (Ibid, p.50).

இந்து சமயத்தைப் பற்றி ஷோபன்ஹவர் எடுத்துக் கூறியவைகளை நீட்ஷே வாசித்திருப்பதன் மூலம் இந்த எண்ணக்கருவிற்கு ஈர்க்கப்பட்டவராக அவர் காணப்பட்டமை புலனாகின்றது. குறிப்பிட்ட கீழைத்தேய சிந்தனைகளுக்கும், நீட்ஷேயினுடைய அறிவியல் பற்றிய சிந்தனைகளுக்கும் ஒரு குறிப்பிடத்தக்க அளவு ஒற்றுமை இருப்பது போன்று தோன்றினாலும் இது பற்றிய நேரடித் தெளிவினைத் தரக்கூடிய சான்றுகள் அரிதாகவே கிடைக்கின்றது. இவ்வாறு மனிதர்கள் பற்றுக்களை துறந்த நிலையிலேயே மேற்கூறப்பட்டதனைப் போன்று வாழ முடியும். இது அவர்களது வாழ்விலே பாரிய மாறுதலை ஏற்படுத்துவதுடன் உயர்ந்த நிலைக்கும் இட்டுச் செல்லும். நீட்ஷே குறிப்பிடும் மனிதனும் இவ்வாறான நன்மை தீமைகளுக்கு அப்பாற் பயணிப்பவனாகவும், துன்ப துயரங்களை இயல்பாக ஏற்று நடப்பவனாகவும் காணப்படுகின்றமையினால் நீட்ஷேயின் சிந்தனைகளில் கீழைத்தேய மரபுகளின் செல்வாக்கு வெகுவாக இடம்பெற்றுள்ளமைக்கு வாய்ப்புக்கள் காணப்படுகின்றது. கிறிஸ்தவ அறிவியல் - ஒழுக்கத்துடன் ஒப்பிடும்போது, நீட்ஷேயின் சிந்தனைகளும், இந்திய அறிவியல் சிந்தனைகளுக்கும் பாரிய வித்தியாசம் காணப்படுகின்றது. இருந்தாலும் சரியான செயலைச் செய்வதற்கான ஒரு தேவைக்குரிய போராட்டத்திற்கும், கடமைக்கும் மேலுள்ள ஒரு தீவிரப் பற்றை அவைகள் இரண்டும் கொண்டிருக்கின்றன. இது தொடர்பாக தோமஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்; ''மனித குழாமாக எமக்கு அறிவியலானது அறியாமை தொடர்பான ஒரு பயத்திலிருந்து ஓர் கவசத்தை உருவாக்குவதற்குத் தேவையானதாகத் தெரிகின்றது. அறவழி நிலையிலிருந்தும், கடப்பாடுகளிலிருந்தும் நாம் விலகிச் செல்வோமானால் எமது வாழ்வுகள் அர்த்தமற்றதாகிவிடும். நீட்ஷே அறவியலை தனது ஒழுக்கங்களின் மரபு (The Genology of Morals) எனும் நூலில் வேறுபட்ட கண்ணோக்கில் பார்க்கின்றார். இருந்தபோதிலும் மனிதனுடைய செயற்பாடுகள் மற்றும் அவனுக்குள்ளேயே இருக்கும் கடமைகள் என்பவற்றைக் கருத்தில் கொள்பவராக இருக்கின்றார். இது உள்ளமைந்த ஒழுக்கவியலின் ஒரு வடிவமாக இல்லையா? எமது சொல்லில் நியாயப்படுத்தக் கூடிய ஒரு வாழ்க்கை முறையை அடைவதில் நீட்ஷே பிடிவாதமாக இருக்கின்றார். அவருடைய வாழ்க்கை முறையானது சக்தி வாய்ந்த ஒன்றாகும். உண்மையில் வாழ்வானது வல்லமைக்கான மனஉறுதி எனில் அது கரடு முரடானது பாதைகளில் பயணிக்கவேண்டிய தேவைப்பாடுடையதாகவும் இருக்கின்றது'' (Thomas, D. R. (1994) Nietzsche and Asian Philosophy. p.21).

நீட்ஷே 'ஒழுக்கங்களின் மரபு' என்ற நூலிலே ஒழுக்கம் என்ற விடயத்தினை வேறுபட்ட உயர்ந்த நிலையில் பார்க்கின்றார். ஆசைகளிலிருந்து விடுபட்ட ஓர் துறவு நிலையில் நோக்குகின்றார். அதற்கு எடுத்துக்காட்டாக இந்தியச் சிந்தனைப் பள்ளிகள் வலியுறுத்தும் துறவின் முக்கியத்தினைக் கூறுகின்றார்; ''இந்தியத் துணைக் கண்டத்தில் வாழ்ந்த விசுவாமித்திரன் என்ற

அரசன் (King Vishvamitra) ஆயிரம் ஆண்டுகள் இடைவிடாமல் தன்னைத்தானே துன்புறுத்திக் (Self-torture) கொண்டதன் விளைவாக அபார ஆற்றல்களைப் பெற்றானாம். அந்த ஆற்றல்களைக் கொண்டு புதியதோர் சுவர்க்கத்தையே படைத்தான்'' (Nietzsche, F. (1956) The Birth of Tragedy and 'The Genealogy of Morals. Trans. Golffing, F., p.251).

இவ்வாறு இந்திய சிந்தனைகளைத் தனது நூல்களின் புதிய மரபுகளை விளக்குவதற்கான ஆதாரங்களாகக் கொண்டமையிலிருந்து நீட்ஷேயினது இந்தியப் புரிதல் தெளிவாகின்றது. இவ்வாறான சுய மானிட விடுதலை, உயர்ந்த தன்மைகள் அவரது அதிமானுடக் கருத்தாக்கத்திலும் பெரும் பங்களிப்பாற்றியுள்ளதை அறிய முடிகின்றது. நீட்ஷேயின் அதிமானுடத் தளத்தினை உருவாக்குவதற்கான அடிப்படைகளை உபநிடதங்களும் வழங்கியுள்ளன. மனத்தை பலப்படுத்தி திடசித்தத்துடன் செயலாற்றுகையில் உயர்ந்த நிலையை மனிதன் அடைய முடியும். இக் கருத்தினை சாந்தோக்கிய உபநிடதமும் வெளிப்படுத்துகையில்; ''ஆத்மாவே கீழும், ஆத்மாவே மேலும், ஆத்மாவே பின்னும், ஆத்மாவே முன்னும், ஆத்மாவே வலத்தும், ஆத்மாவே இடத்தும், ஆத்மாவே இது எல்லாம். எவன் இங்ஙனம் காண்கிறானோ, சிந்திக்கிறானோ, அறிகிறானோ, ஆத்மாவிலேயே இன்பமும், ஆத்மாவிலேயே விளையாட்டும், ஆத்மாவிலேயே கூடி மகிழ்தலும், ஆத்மாவிலேயே ஆனந்தமும் உடைய அவன் (ஸ்வாரட்). தன்னைத்தானே ஆள்பவன் ஆகிறான் அவன் எல்லா உயிர்களிலும் தன் இச்சைப்படி நடக்கக் கூடியவன் ஆகிறான். எவர்கள் இதற்குப் பிரிதாய்க் காண்கிறார்களோ அவர்கள் பிறரால் ஆளப்படுகின்றனர் அவர்களுடைய உலகங்கள் அழிவுடையவை அவர்கள் எவ்வுலகங்களிலும் தம் இச்சைப்படி நடக்கக் கூடியவர்கள் அல்லர் (அண்ணா. *(1957)* அதே நூல், பக். *81 – 82).*

இக் கருத்தினை மேலும், பிருஹதாரணிய உபநிடதம் கூறுகையில்; ''அவர் காணப்படாமல் காண்பவர், கேட்கப்படாமல் கேட்பவர், நினைக்கப்படாமல் நினைப்பவர், அறியப்படாமல் அறிபவர்; அவரைக்காட்டிலும் வேறாகக் காண்பவர் இல்லை, அவரைக் காட்டிலும் வேறாகக் கேட்பவர் இல்லை. அவரைக் காட்டிலும் வேறாக நினைப்பவர் இல்லை. அவரைக்காட்டிலும் வேறாக அறிபவர் இல்லை. அவர் தான் உன்னுடைய ஆத்மா, அந்தர்யாமி, அழிவற்றவர் மற்ற எல்லாம் அழிவுள்ளது.'' *(மேலது. ப. ப.153).*

மேற்கூறப்பட்ட உபநிடத சிந்தனைகளில் நீட்ஷே வலியுறுத்தும், அடைய விரும்பும் உயர் மனிதனுக்கு அடிப்படையான ஆழ்ந்த சித்தத்தினூடான அறிவாற்றல் மிக்க கருத்துக்கள் வெளிப்படுகின்றமையினையும் அவதானிக்கலாம். ஆதலால் ஆரம்பகால உபநிடத சிந்தனைகளும் நீட்ஷேயினது கருத்தாக்கத்திற்கு அடிப்படையாகும் என்ற கருத்திற்கு வரமுடிகின்றது. நீட்ஷேயின் பிறிதொரு நூலான துன்பியலின் பிறப்பில் (The Birth of Tragedy) வரும் ஓர் அணி இலக்கணத்தை மீட்டிப்பார்க்கும் போது அது தெளிவாக 'மாயா' என்னும் சொற்றொடரைக் குறிப்பிடுவதும் 'Day break' எனும் புத்தகத்தின் ஆரம்பப் பக்கமானது ரிக் வேதத்தில் வரும் ஒரு வரியினைக் கொண்டிருப்பதும் அவருடைய இறுதியான சரீர உடைவின் சில நாட்களுக்குப் பிறகு றொஹ்டே (Rohde) என்பவருக்கு எழுதிய ஒரு குறிப்பில் வேதங்களில் தொகுக்கப்பட்ட வசனங்கள் காணப்படுவதும், கிறிஸ்தவம், யூதாயிசம், ஜேர்மனிய மெய்யியல் மற்றும் கிரேக்க மெய்யியல் என்பவற்றின் அளவுடன் ஒப்பிடுகையில் நீட்ஷேயிற்கு இந்திய சிந்தனை தொடர்பான புலமைத்துவம் இருந்தமை தெளிவாகின்றது. துன்பியலின் பிறப்பு எனும் நூலின் முதலாவது பாகத்திலே ''மனிதன் மாயையினால் சூழப்பட்டு, அகப்பட்ட நிலையில் உள்ளான்'' (Nietzsche, F. (1956) Op.cit, Trans. Golffing, F., p.22). என்ற விடயத்தை அப்பலோ பாத்திரமூடாக நீட்ஷே வெளிப்படுத்துகிறார்.

இந்திய மெய்யியலில் அடிக்கடி தோன்றும் ''கர்மா'' குறித்த அடிப்படைக் கொள்கைகளை நீட்ஷே ஜேர்மன் கல்வியளார்களுக்கு புரியவைக்கும் பொருட்டு ஷோபன்ஹவருக்கு எழுதிய எல்லையற்ற தியானம் (Untimely Meditations) என்பதில் உபநிடத வசனங்களான; ''மனிதன் அவனுடைய கர்மங்களுக்கு (செயல்) ஏற்றவகையிலே அறிவிலி, மூடர், வாய் பேசாத, காது

கேட்காத, மற்றும் அங்கவீனர்களாகவும் பிறக்கிறான்." (Nietzsche, F. (1997) Untimely Meditations. Trans. Hollingdale, R. J., p.8). என்று அறிமுகப்படுத்தினார்.

Day break இன் தலையங்கப் பக்கத்தில் "சிதைவுற்று இல்லாத பல நாட்கள் அங்கே உள்ளன." என்பது போன்ற ரிக்வேதத்தில் வரும் சொற்றொடர் பாவிக்கப்படுவதையும் காணலாம். கடவுள் மறுப்பினைக் கூறுகின்ற உபநிடதங்கள் பிரம்மத்தை உறுதியான சக்தியாகக் கொள்கின்றன. பிரம்மத்தை அடைவதற்கு முதலில் ஆன்மாவைப் பலப்படுத்தும் வகையிலான மந்திர உற்சாடனங்களை மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறான மந்திர உற்சாடனங்கள் நீட்ஷேயிலும் செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. 'விஞ்ஞான மகிழ்வு (The Gay Science)' என்ற நூலில் நீட்ஷே; "ஓம் மனே பத்மே ஹூம் (om mane padme hum)" மற்றும் "ராம் - ராம் - ராம் (Ram, Ram, Ram)" (Nietzsche, F. (1974) The Gay Science. Trans. Kaufmann, W., p. 184). போன்ற மந்திரங்களை உபயோகிக்கின்றார்.

இங்கு விஸ்ணு தெய்வத்தை முக்கியப்படுத்தியிருக்கலாம் என்பது புலப்படுகின்றது. ஆதலால் இவருக்கு பகவத்கீதையின் மீதுள்ள ஆர்வத்தின் வெளிப்பாடாகவும் இவ் விடயத்தை அணுக முடிகின்றது. இவ்வாறு நீட்ஷேயினது சிந்தனைகளில் பொதுவாக பல இடங்களிலும் உபநிடத சிந்தனைத் தாக்கமானது காணப்படுகின்றமையினை அவதானிக்கலாம். துறவியல் தொடர்பான ஓர் கலந்துரையாடலின் போது, 'ஒழுக்கங்களின் மரபு' (The Genealogy of Morals) என்பதிலேயே நீட்ஷே இந்தியச் சிந்தனைகள் தொடர்பாக ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு மேற்கோள்களை காட்டுகிறார். வேதாந்தங்களை நம்பும் ஒருவருக்கு செய்யப்படுகிறது மற்றும் செய்யப்படாதுள்ளது ஆகிய இரண்டும் ஒரு வலியையும் கொடுக்காது. "ஞானி ஒருவன் நன்மை - தீமை இரண்டிலிருந்தும் அவனாகவே அவனை விடுவிக்கின்றான்." "அவனுடைய இராட்சியத்தை ஒரு கர்ம வினையும் தாக்காது". "அவன் நன்மை - தீமை இரண்டிற்கும் அப்பால் சென்றிருக்கிறான்." இவ்வாறான விடயங்கள் கௌசதீக உபநிடதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, நீட்ஷேயின் நன்மை - தீமைகளுக்கு அப்பால் என்ற நூலும் இவ்விடயத்தையே மையக்கருத்தாகக் கொண்டுள்ளமை நீட்ஷேயின் உபநிடதங்களின் மீதும், இந்திய சிந்தனைகளின் மீதும் உள்ள தொடர்பினை அறிய முடிகின்றது. இது தொடர்பாக தோமஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்; "நீட்ஷே போல் டொய்சனுடைய உபநிடத மெய்யியல் (Das system Des vedanta) இருந்து மூன்று மேற்கோள்களைக் குறிப்பிடுகின்றார். அவைகள் எல்லாம் சங்கரருடைய பிரம்ம சூத்திரத்தின் விளக்க உரை மற்றும் சாந்தோக்கிய உபநிடதத்துடன் ஒத்துப் போவனவாகவும் உள்ளன. "அறிவாலான மனிதனுக்கு ஒரு கடமையும் இல்லை." என்ற அடையாளப்படுத்தப்படாத ஒரு வசனமும் பாவிக்கப்படுகின்றது. மீட்சிக்கு அறவழி மட்டும் போதுமானதாக இல்லை என்பதை இந்தியர்கள் அங்கிகரிப்பதற்காக நீட்ஷே அவர்களைப் புகழ்கிறார். அவர்களுடைய விடுதலை தொடர்பான கொள்கைகள், இன்மைவாதமே அதி உயர்ந்ததென மதிப்பிடும் எபிக்கூரிய (Ancient Greek Philosopher)

அடி ஆழ சிந்தனைகளுடன் ஒத்திசைவதாக நீட்ஷே நம்புகின்றார் (Thomas, D.R. 1994, Op.cit, p.79). இவ்வாறு நீட்ஷேயின் சிந்தனைகளில் உபநிடதங்களின் செல்வாக்குகள் காணப்பட்டதனை அறிய முடிகின்றது.

## 5. முடிவுரை

மனிதனின் வாழ்வு, இருப்பு தொடர்பான பிரச்சினைகள் வலுப்பெற்ற காலப்பகுதியில் மனிதர்களுள் மேம்பட்ட அதிமானுட நிலை எனும் உயர்நிலையை மனிதர்கள் அடைய வலியுறுத்தும் முயற்சியை நீட்ஷே தனது சிந்தனைகளின் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார். குறிப்பாக மனிதர்கள் அக்காலப்பகுதியில் அடக்குமுறைகட்கும், மதக்கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு சுதந்திரமற்ற நிலையில் காணப்பட்டனர். அத்துடன் கெடுதலில் நன்மை காணுதல் (Pessimism) சிந்தனையானது அனைத்தையும் துன்பியல் கண்கொண்டு நோக்கியமையினால்

உலகின் வீழ்ச்சிப் படிநிலையாக அச்சூழ்நிலை காணப்பட்டது. இவ்வாறான சூழ்நிலையை சீர்ப்படுத்துவதற்கு மீயுயர் மனிதர்கள் உருவாகுதல் வேண்டும் என்ற கருத்தினை மிக விரிவாக நீட்ஷே முன்னிறுத்தியுள்ளமையினை ஆய்வின் ஊடாக அறிய முடிகின்றது.

நீட்ஷேயினது சிந்தனைகளும், ஆரம்பகால உபநிடதங்களும் வெளிப்படுத்தும் மெய்யியல் அடிப்படைகளில் காணப்படுகின்ற ஒருமைப்பாடுகளும், ஷோபன்ஹவர், போல் டொய்சன், மக்ஸ் முல்லர் போன்ற பல ஜேர்மனிய சிந்தனையாளர்களின் கருத்தாக்கங்களும் இயல்பாகவே நீட்ஷேயிற்கு முற்கால உபநிடதங்கள் மீதான ஆர்வத்தினை தூண்டுவதாக அமைந்திருக்க வாய்ப்புள்ளது. மன வலிமைக்கு முக்கியத்துவமளித்து மனிதனை மேம்படுத்துவதான கருத்துக்களினையே ஆரம்பகால உபநிடதங்கள் வலியுறுத்தியுள்ளதுடன், கடவுள் கோட்பாட்டினையும் நிராகரிக்கின்றன. இவ்வாறானதோர் அடிப்படையையே நீட்ஷேயினது சிந்தனைகளும் கொண்டுள்ளதுடன், மனிதமையவாத சிந்தனைப் போக்கினை இவர் அதிகம் முக்கியப்படுத்துவதனால் மார்க்சிய சிந்தனைகளின் செல்வாக்கும் இவரது கருத்துக்களில் பிரதிபலிப்பதனையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். கார்ள் மார்க்ஸ்ஸினது சிந்தனைகளிலும் மனிதநலவாதமே முக்கியம் பெற்றது. அதாவது மனிதனுக்கு நன்மை தரக்கூடிய விடயங்களினையே மார்க்ஸ் வலியுறுத்தினார். இவையும் நீட்ஷேயின் சிந்தனைகளிற்கு அடிப்படையாக அமைந்திருக்க முடியும். யேசு கிறிஸ்துவின் இறப்பினை அறிவித்த இவர் அவ் இடைவெளியை நிரப்புவதற்கு மனிதர்கள் பலம் பெறவேண்டும் என்றவகையில் 'அதிமானுடத்' தளத்தினைக் கட்டமைக்கின்ற வகையில் தனது கருத்துக்களை முன்வைத்தமையினால் நீட்ஷேயினது சிந்தனைகளின் பின்னணியில் ஆரம்பகால உபநிடதச் செல்வாக்கு மிகுதியாக வெளிப்படுவதும் அறியத்தக்கது. அதேவேளை உபநிடதக் கருத்தாக்கங்கள் ஆஸ்திகப் போக்கினைக் கொண்டுள்ளமையினையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**உசாத்துணைகள்**

Danto, A. C. (1987). *Mysticism and Morality: Oriental Thought and Moral.* New York: Columbia University Press.

Deussen, P. (1919). *The Philosophy of The Upanishads.* Trans. Geden, A. S. New York: Dover Publications.

Nietzsche, F. (1956). *The Birth of Tragedy.* Trans. Golffing, F. Doubleday Anchor Books.

Nietzsche, F. (1956). *The Birth of Tragedy and 'The Genealogy of Morals'.* Trans. Golffing, F. New York: Doubleday & Company.

Nietzsche, F. (1968). *The Will To Power, (Vol - 14).* Trans. Kaufmann W. & Hollingdale, R. J. London: George and Unwin Ltd.

Nietzsche, F. (1974). *The Gay Science.* Trans. Kaufmann, W. New York: Vintage Books.

Nietzsche, F. (1997). *Day Break.* Trans. Hollingdale, R. J. Cambridge University Press.

Nietzsche, F. (1997). *Twilight of the Idols.* Trans. Polt, R. Cambridge: Hackett Publishing Company.

Parkes, G. (ed.), (1991). *Nietzsche and Asian thought.* London: The University of Chicago Press Ltd.

Singer, P. K. (ed.), (1991). *A Companion to Ethics.* Oxford: Blackwell.

Thomas, D. R. (1994). *Nietzsche and Asian Philosophy: A comparative study*. Durham theses (E – Theses), Durham University.

அண்ணா. (1957). *உபநிஷத்ஸாரம், இரண்டாம் பாகம், சாந்தோக்கிய - பிருஹதாரணியக உபநிஷத்துக்களும் பிரம்ம சூத்திரங்களும், நூலின் அகராதியும்*. மயிலாப்பூர் - சென்னை.

அண்ணா. (1964). *உபநிஷத்ஸாரம் - ஈச – கேன- கட உபநிஷத்துக்கள்*. மயிலாப்பூர் - சென்னை.

அண்ணா. (1965). *உபநிஷத்ஸாரம் - தைத்திரீயோபநிஷத்து*. மயிலாப்பூர் - சென்னை.

அனஸ். எம். எஸ். எம்., (2006). *மெய்யியல் - கிரேக்கம் முதல் தற்காலம் வரை*. கொழும்பு – சென்னை: குமரன் புத்தக இல்லம்.

சட்டோபாத்யாயா, தே. பி. (2008). *இந்தியத்தத்துவம்: ஓர் அறிமுகம்*. மொ.பெ. கிருஸ்ணமூர்த்தி, வெ. சென்னை: படைப்பாளிகள் பதிப்பகம்.

நீட்ஷே, (2006). *ஜரதுஷ்ட்ரா இவ்வாறு கூறினான்*. மொ.பெ. ரவி. நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.

மன்னன், ம. (2004). *சிந்தனையாளர் நியெட்ஸே (ஐந்தாம் பதிப்பு)*. சென்னை: பிரேமா பிரசுரம்.

ராஜகோபாலாச்சாரியார், (1955). *.உபநிஷதப் பலகணி*. சென்னை: .பாரதி பதிப்பகம்.

ஜமாஹிர், பீ. எம். (2010). *மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும்*. கண்டி: .நதா வெளியீடு.

ஜானகிராமன், கிரி. ஆர். (2002). *இன்றைய புதிய கோணங்களில் உபநிடதங்கள்*. சென்னை: இராமநாதன் பதிப்பகம்.

ஹிரியண்ணா, எம். (2008). *இந்திய மெய்யியல்*. மொ.பெ. தேவசேனாதிபதி, வ. ஆ. ஷண்முகசுந்தரம், வ. நா. கொழும்பு – சென்னை: குமரன் புத்தக இல்லம்.